**<u>மாவட்ட நீதிமன்றம், உதகமண்டலம்</u>**

C.O.S. No. 1 of 2023

பெயர் : சிவலிங்கம்

<u>11.8.2025</u>

**<u>பி.வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் ஊட்டியில் 30 ஆண்டுகளாக இருக்கிறேன். நான் B.Sc., Mathematics படித்துள்ளேன். நான் படித்து முடித்தபிறகு எந்த ஆண்டுமுதல் Highways ரோடு கான்டிராக்ட் வேலையை உரிமம் பெற்று செய்கிறேன் என்று கேட்டால், 2008ஆம் ஆண்டுமுதல் செய்கிறேன். நான் எந்தெந்த பஞ்சாயத்தில் ஒப்பந்தகாரராக பதிவு பெற்றுள்ளேன் என்று கேட்டால், நான் Highways, பஞ்சாயத்து யூனியன், அனைத்து டவுன்பஞ்சாயத்து ஆகியவற்றில் ஒப்பந்தகாரராக பதிவு செய்துள்ளேன். Tender விடுவார்கள், நான் அதில் கலந்துகொண்டு எனக்கு Tender கிடைத்தால் வேலைகளை மேற்கொள்வேன். ஊட்டியில் கட்டுமானப் பொருட்கள் கிடைப்பதில்லை, அதனால் மணல், ஜல்லி கற்கள் போன்ற அனைத்து கட்டுமானப்பொருட்களையும் நாங்கள் மேட்டுபாளையத்தில் இருந்துதான் வாங்குவோம். எங்களுக்கு Work period கொடுத்து, Work எல்லாம் முடிந்தபிறகுதான் பில்லுக்கு பேமெண்ட் கொடுப்பார்கள் என்று சொன்னால், ஆமாம். இவ்வழக்கின் வாதியின் பெயர் சுப்ரமணியாகும். எனக்கு வாதி

சுப்ரமணியனை 10 ஆண்டுகளாக தெரியும் என்று சொன்னால், 10 ஆண்டுகளாக தெரியாது, 4,5 ஆண்டுகளாக தெரியும். எனக்கு வாதியை 2008ஆம் ஆண்டுமுதலே தெரியும் என்றும், அப்போது இருந்தே நான் வாதியிடம் கட்டுமானப்பொருட்களை வாங்கி வந்தேன் என்று சொல்வது தவறாகும்.

நான் 2018ஆம் ஆண்டுமுதல் வாதியிடம் கட்டுமானப் பொருட்களை வாங்கினேன். நான் வேலைகளை எல்லாம் செய்தபிறகு பொறியாளர் அதை ஆய்வு செய்து நான் வேலைகளை சரியாக செய்திருக்கிறேனா என்று பார்த்த பிறகுதான் எனக்கு பேமென்ட் வழங்குவார்கள் என்று சொன்னால், ஆமாம். நான் ரோடு வேலை, ரிவிட்மெண்ட் கட்டும்வேலை, சின்ன கட்டிடங்கள் கட்டும்வேலை அனைத்துமே கலந்து காண்ட்ராக்ட் எடுத்து செய்வேன். ஒரு வேலையை எடுத்து செய்து முடிப்பதற்கு மாத கணக்காகும். பொதுவாக நாங்கள் கட்டுமானப்பொருட்களை கிரடிட்டில் பெற்று பில்லுக்கு பணம் வந்தபிறகுதான் கட்டுமானப்பொருட்களுக்கான பில் தொகையை செலுத்துவோம் என்று சொன்னால், அப்படி இல்லை, ஏற்கனவே பில் தொகைக்கு பணம் வந்திருந்தால், கட்டுமானப்பொருட்களுக்கு பணத்தை செலுத்தி வாங்குவோம், மேலும் எந்த அடிப்படையில் கட்டுமானப்பொருட்களை சப்ளை செய்கிறார்களோ அதற்கேற்ப கட்டுமானப்பொருட்களுக்கு பணத்தை செலுத்துவோம். நாங்கள் மொத்தமாக கிரடிட்டில்

கட்டுமானப்பொருட்களை வாங்குவதில்லை என்று மறுக்கமுடியாது, கிரடிட்டிலும் கட்டுமானப்பொருட்களை வாங்குவோம் என்று சொன்னால், ஆமாம், கிரடிட்டிலும் கட்டுமானப்பொருட்களை வாங்குவோம். வாதி சுப்ரமணியனை எனக்கு தெரிந்ததுமுதல் நான் அவரிடம் கிரடிட்டில் கட்டுமானப்பொருட்களை வாங்கி அவருக்கு பணமும் செலுத்தியுள்ளேன் என்று சொன்னால், வாதி சுப்ரமணியத்திடம் வாங்கவில்லை, அவருடைய நிறுவனத்தில்தான் நான் கட்டுமானப்பொருட்களை வாங்கி பணம் செலுத்தியுள்ளேன். நான் வாதி சுப்ரமணியத்திடம் கிரடிட்டில் கட்டுமானப்பொருட்களை வாங்கி அதற்கு பணம் செலுத்தியுள்ளேன் என்பதற்கு நானே ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், ஆமாம். நான் கூறும் சத்குரு பாபாஜி டிரேடர்ஸ் மற்றும் சத்குரு பாபாஜி எர்த்மூவர்சுக்கு வாதி சுப்ரமணியன்தான் உரிமையாளர் என்று சொன்னால், ஆமாம். நான் வாதியிடம் கட்டுமானப்பொருட்களை வாங்குவதை எந்த வருடம் நிறுத்தினேன் என்று கேட்டால், நான் சத்குரு பாபாஜி டிரேடர்சிடம் இருந்து கட்டுமானப்பொருட்களை வாங்குவதை 2021ஆம் ஆண்டு நிறுத்தினேன். நான் 2021ஆம் ஆண்டு சத்குரு பாபாஜி டிரேடர்சிடம் இருந்து கட்டுமானப் பொருட்களை வாங்குவதை நிறுவதற்கு முன்பு, அந்த நிறுவனத்திற்கும் எனக்கும் பல கோடி ரூபாய்க்கு வரவு செலவு ஆகியுள்ளது என்று சொன்னால், ஆமாம். நான் வாதிக்கு

கொடுக்கவேண்டிய நிலுவைத்தொகையை கொடுக்காததால்தான் வாதி எனக்கு கட்டுமானப்பொருட்களை சப்ளை செய்வதை 2021ஆம் ஆண்டு நிறுத்திவிட்டார் என்றும், அதனால்தான் வாதியுடன் செய்த வரவு செலவை நான் 2021ஆம் ஆண்டு நிறுத்தினேன் என்று சொன்னால், அப்படி சொல்வது தவறாகும்.

வாதி 2021ஆம் ஆண்டிலிருந்து பலமுறை நான் கட்டுமானப் பொருட்களுக்கு செலுத்தவேண்டிய தொகையை கேட்டும் நான் அதை ஊதாசீனம் படுத்திவிட்டேன் என்று சொன்னால், அப்படி இல்லை. பிறகு 9.5.2022ஆம் தேதி எனக்கும் வாதிக்கும் நான் வாதிக்கு கொடுக்க வேண்டிய தொகை அதிகமாக இருந்தாலும், எங்களுக்குள் ஒரு இணக்கம் ஏற்பட்டு நான் Exhibit A4 ஒப்பந்தத்தை வாதிக்கு எழுதி கொடுத்தேன் என்று சொன்னால், தவறாகும், வாதி வேறு கடனை வாங்குவதற்காகதான் அவர் கேட்டதற்காக நான் அந்த ஒப்பந்தத்தை எழுதி கொடுத்தேன், என் கடனுக்காக அந்த ஒப்பந்தத்தை நான் எழுதி கொடுக்கவில்லை. வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை. நான் வாதி கடன் பெறுவதற்காகதான் Exhibit A4 ஒப்பந்தத்தை எழுதி கொடுத்தேன், என் கடனுக்காக அந்த ஒப்பந்தத்தை வாதிக்கு எழுதி கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டு நான் வாதிக்கு பதில் அறிவிப்போ அல்லது அறிவிப்போ அனுப்பினேனா என்று கேட்டால், அனுப்பவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் Exhibit A4 ஒப்பந்தத்தில் இருப்பது

என்னுடைய கையொப்பம் மற்றும் வாதி சுப்ரமணியனின் கையொப்பம் என்று சொன்னால், ஆமாம். இந்த Exhibit A4 ஒப்பந்தத்திற்கு வாதி Stamp duty கட்டவேண்டும் என்று நான் இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், அந்த உத்தரவுக்கு எதிராக நான் மான்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்து அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால், ஆமாம்.

இவ்வழக்கில் ஒரு முதல்நிலை தீர்ப்பாணை ஏற்பட்டு அதனடிப்படையில் நான் வாதிக்கு பணம் செலுத்தியுள்ளேன் என்றும், அவ்வாறு வாதிக்கு நான் எவ்வளவு பணம் செலுத்ினேன் என்று கேட்டால், முதலில் ஒரு ரூபாய் 15,00,000/-மும், பிறகு ரூபாய் 11,00,000/- சொச்சமும் வாதிக்கு செலுத்தியுள்ளேன்.

N. MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.08.11 16:33:20 +0530